DINAKARAN

21 JULY 2022

PAGE 16

தினகரன் புதுவை

### இந்தியானா பல்கலையுடன்

# புதுவை பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

புதுச்சேரி, ஜூலை 21: புதுவை பல்கலைக்கழகம், அமெரிக்காவின் இந்தியானா பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

புதுவை பல்கலைக்கழகத்தின் ஸ்கூல் ஆப் மேனேஜ்மென்ட், அமெரிக்காவிலுள்ள இந்தியானா பல்கலைக்கழகத்தின் ஸ்கூல் ஆப் பிசினஸ் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சி நடந்தது. இந்தியானா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மார்க் கனடா மற்றும் ஸ்கூல் ஆப் பிசினஸ் டீன் சிட்டிபாபு கோவிந்தராஜுலு, புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங், பதிவாளர் அமரேஷ் சமந்தராயா ஆகியோர் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்நிகழ்ச்சியில் கல்லூரி மேம்பாட்டு கவுன்சில் டீன் சந்திரசேகர ராவ், சர்வதேச உறவுகள் டீன் சுப்ரமணியம் ராஜு, மேலாண்மை பள்ளி டீன் மாலாபிகா தியோ, துறை தலைவர்கள் லாசர், மாரியப்பன், அருள், அனுசந்திரன், சங்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் மாணவர் பரிமாற்றம், கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்பை வழங்குவதாகும். இதன் மூலம் புதுவை பல்கலைக்கழக மேலாண்மை பள்ளி மாணவர்கள் இந்தியானா பல்கலைக்கழக கோகோமோவில் படிக்கவும், சர்வதேச வெளிப்பாட்டை பெறவும் வாய்ப்பைப் பெறுவார்கள். இதேபோல், இந்தியானா பல்கலைக்கழக மாணவர்கள் புதுவை பல்கலைக்கழகத்திற்கு வந்து இந்திய கல்வி மற்றும் கலாச்சாரத்தை அறிந்து கொள்ளலாம்.



▶ புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் அமெரிக்காவின் இந்தியானா பல்கலைக்கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

DINAMALAR

21 JULY 2022

PAGE 4



■ புதுச்சேரி பல்கலைக்கழகத்தில், துணைவேந்தர் குர்மீத்சிங் முன்னிலையில் அமெரிக்காவின் இன்டியானா பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

# புரிந்துணர்வு ஒப்பந்தம்

**புதுச்சேரி, ஜூலை 21-**

புதுச்சேரி பல்கலைக்கழகம், ஸ்கூல் ஆப் மேனேஜ்மெண்ட், அமெரிக்காவின் இண்டியானா பல்கலைக் கழகம், ஸ்கூல் ஆப் பிசினஸ் அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இதற்கான நிகழ்ச்சி புதுச்சேரி பல்கலைக்கழக வளாகத்தில் நடந்தது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கம், மாணவர் பரிமாற்றம், கல்வி, ஆராய்ச்சியில் ஒத்துழைப்பு வழங்குவது ஆகும்.

இந்த ஒப்பந்தத்தில், இண்டியானா பல்கலைக்கழக துணைவேந்தர் மார்க் கனடா, ஸ்கூல் ஆப் பிசினஸ் டீன் சிட்டிபாபு கோவிந்தராஜுலு ஆகியோர் கையெழுத்திட்டனர்.

புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங், பதிவாளர் அமரேஷ் சமந்தராயா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.